## வேங்கை (இந்திய வங்க புலி) தகவல்

நீளம் - 2.5 - 3 மீட்டர்

எடை - 125 -250 கிலோ

எண்ணிக்கை - 1165 - 1657 (சராசரி 1411)

ஆயுள் - கிட்டத்தட்ட 10 - 16 வருடம்

இரை - புள்ளி மான், கடம்ப மான், காட்டுப்பன்றி, காட்டெருது

சினை காலம் - 105 - 112 நாட்கள்

முக்கியத்துவம் - உலகில் வாழும் புலிகளின் எண்ணிகையில் ஏறத்தாழ 50 சதவிகிதம் இந்திய காடுகளில் மட்டும் உள்ளன.



* *WII,* தேசிய வேங்கை காப்பு ஆணையம் *(NTCA)* மற்றும் இந்திய அரசின் கண்காணிப்பு நடவடிக்கை *2008*

புகைப்படங்கள்: சமீர் சின்ஹா / TRAFFIC India, சந்தோஷ் சாலிகிராம், அமீன் அகமது, திவாகர் சர்மா, ஜோசப் வட்டகவன் / WWF-India.

வடிவமைப்பு: அனில் செருக்கப்பள்ளி, தமிழாக்கம் – பாரதிதாசன்/ அருளகம்

தொகுப்பு : உயிரின, நிலவிரிவுகளுக்கான வேலைத்திட்டம்

வெளியீடு: மே 2010

## பணி நடைபெறும் இடங்கள்




இயற்கைக்கான உலக நிதியம் (WWF-India) புலி பாதுகாப்பு பணியில் ஈடுபட்டுள்ள இடங்கள்.

நிலவிரிவுகள் :

1. தெராa;ஆர்க் நிலவிரிவு (உத்திரகாண்ட், உத்திரப்பிரதேசம், பீகார்)
2. சத்புரா மைக்கால் நிலவிரிவு (மத்திய பிரதேசம், சட்டீஸ்கர், மகராஸ்ட்டிரம்)
3. மேற்கு தொடர்ச்சி மலை , நீலகிரி நிலவிரிவு (கேரளா, கர்நாடகம், தமிழ்நாடு)
4. சுந்தரவனக் காடுகள் (மேற்கு வங்கம்)
5. வடக்குக்கரை நிலவிரிவு (அசாம், அருணாசலப்பிரதேசம்)
6. காசிரங்கா, கார்பி அங்லாங் நிலவிரிவு (அசாம், மேகாலயா, நாகலாந்து)

புலி காப்பகங்கள்

7. ரன்தம்பூர் (ராஜஸ்தான்)
8. சிம்லிபல் சட்கோசியா (ஒரிசா)
9. பக்சா (மேற்கு வங்கம்)
10. பண்ணா (மத்திய பிரதேசம்)

WWF for a living planet®

# புலிகள் பாதுகாப்பு

சவால்கள், தீர்வுக்கான வழிவகைகள், நாம் என்ன செஅுலாம் ?



WWF-India
172-B, Lodi Estate
New Delhi 110 003
Tel: +91 4150 4783
www.wwfindia.org

*WWF-India stands for World Wide Fund for Nature - India*

# சவால்கள்



கடந்த 2008* ஆம் ஆண்டில், காடுகளில் பொருத்தப்பட்ட தானியங்கி கேமராக்கள் ஒரு உண்மையை காட்டின. நம் நாட்டில் 1411 புலிகள் மட்டுமே எஞ்சி இருக்கும் அதிர்ச்சியான தகவல் தெரிய வந்தது. ஆனால் கடந்த நூற்றாண்டின் தொடக்கத்தில் ஆயிரக்கணக்கான புலிகள் இருந்ததாக ஆவணங்கள் கூறுகின்றன. ஆயிரக்கணக்கான புலிகள் இருந்த நிலை மாறி இன்று வெறும் ஆயிரம் புலிகள் மட்டுமே எஞ்சியிருப்பதற்கு யார் காரணம்? என்ன காரணம்? இக்கேள்விகளுக்கான விடைகள் தெள்ளத்தெளிவாக தெரிந்துவிட்ட நிலையில் எஞ்சி இருக்கின்ற புலிகளையாவது காப்பதற்கு உடனடி நடவடிக்கை எடுப்பது அவசியம்.

வாழிட சிதைவு: புலிகள் வாழ்ந்த காடுகளில் குடியிருப்புகளை அமைத்தல், அணைகள் கட்டுதல், சுரங்கம் தோண்டல், சாலைகள் போட்டு காட்டுயிர்களின் வழித்தடங்களை துண்டித்தல், இயற்கை வளங்களை கட்டுப்பாடின்றி பயன்படுத்துதல் போன்ற அத்துமீறிய நடவடிக்கைகளால் புலிகள் அழிந்து வருகின்றன. இந்த அழிவின் வேகம் அண்மைக் காலங்களில் அதிகரித்துக் கொண்டு வருவது கவலைக்குரியது.

வேட்டை: பல், தோல், எலும்பு, இறைச்சிக்காக புலிகள் தொடர்ந்து கொல்லப்படுகின்றன. புலி வேட்டை தடை செய்யப்பட்டிருப்பினும் அவை தொடர்ந்து ஆடம்பர தேவைகளுக்காகவும், மருந்திற்காகவும், மூடநம்பிக்கையின் பேரிலும் வேட்டையாடப்படுவது அவற்றின் எதிர்காலத்தை கேள்விக்குறியாக்கியுள்ளது

மனிதர்–புலி முரண்பாடு: மனித ஆக்கிரமிப்பால் புலி வாழ்காடுகள் சுருங்கி இரை தட்டுப்பாடு அதிகரித்துவருகிறது. இதனால் புலிகள் வனங்களிலிருந்து வெளியேறி கால்நடைகளை இரையாக கொள்ள நேரிடுகிறது. அதிகரித்து வரும் இந்நிகழ்வுகளால் புலிகளை கிராமவாசிகள் அடித்தும், நஞ்சுவைத்தும் கொல்வது வழக்கமாகி வருகிறது.

* *WII, தேசிய புலிகள் காப்பு ஆணையம் (NTCA) மற்றும் இந்திய அரசின் கண்காணிப்பு நடவடிக்கை, 2008*

# தீர்வுக்கான வழிவகைகள்

இந்திய அரசு, இயற்கைக்கான உலக நிதியத்துடன் இணைந்து 1973 ஆம் ஆண்டு புலிகள் பாதுகாப்புத்திட்டத்தை உருவாக்கியது. அன்றிலிருந்து இந்நிதியம் இத்திட்டத்திற்கு பல வழிகளில் ஆதரவு அளித்து வருகின்றது.

புலிகளின் வாழிடங்களை மறுசீரமைப்பது, அவற்றை பாதுகாப்பது, புலிகளுக்கும் அவற்றின் இரை விலங்குகளுக்கும் இடையிலான சமன் நிலையை உறுதிசெய்வது போன்ற பணிகளில் இந்நிதியம் கவனம் செலுத்துகின்றது. புலிகளின் நீண்ட நாள் பாதுகாப்பிற்காக 6 முக்கிய வாழிடங்களை தேர்ந்தெடுத்து அவற்றில் கீழ் குறிப்பிட்ட நடவடிக்கைகளை செயல்படுத்துகின்றது.

- புலிகளின் வலசை பாதைகளை பாதுகாத்தல், புலிகள் காப்பகங்களை இணைக்கும் பகுதிகளை பேணுதல், அப்பகுதிகளில் உருவாகும் மனிதர்– புலி முரண்பாடுகளை குறைக்க நடவடிக்கை எடுத்தல்.
- புலிகள் வாழும் பகுதிகளில் வாழும் பூர்வ குடிகளுக்கு மாற்று வாழ்வாதாரங்களை அறிமுகப்படுத்துவதன் மூலம் மனிதரால் இயற்கை வளங்களின் மேல் உண்டாகும் தாக்கத்தை குறைக்க நடவடிக்கை எடுத்தல்.
- புலிகளையும் அதன் இரைவிலங்குகளையும் வேட்டையாடுவதை தடுக்க வனத்துறையினருக்கும், பிற நிறுவனங்களுக்கும் உரிய ஆதரவை வழங்குதல்.
- புலிகளையும் அதன் வாழிடங்களையும் பாதுகாக்க கொள்கைகளை வகுத்து மத்திய, மாநில அரசுகளுக்கு வழங்குதல்.
- புலிகள் பாதுகாப்பை முன்னிட்டு அரசின் நிலைப்பாடு மற்றும் மக்களது ஆதரவை திரட்டும் நடவடிக்கைகளில் ஈடுபடுதல்.



# நாம் என்ன செய்யலாம்?

அறிவோம்: புலிகள் தொடர்பான தகவல்களையும் அவைகள் எதிர்நோக்கும் சவால்களையும், ஊடகங்கள் மூலமும், கருத்தரங்குகள், புலிகள் கணக்கெடுப்பு, பாதுகாப்பில் பங்கேற்பதன் மூலமும் புலிகள் பாதுகாப்பு தொடர்பான நம் அறிவை வளர்த்தல் மட்டுமல்லாமல் பாதுகாப்பில் நமக்குரிய பங்கையும் ஆற்றலாம்.

கருத்துப் பரிமாற்றம்: இயற்கைக்கான உலக நிதியம் பள்ளிகளில் உருவாக்கி வரும் இயற்கை கழகங்களில் சேர்ந்தும், நண்பர்கள், உற்றார் உறவினர்களிடம் புலிகளும், அவற்றின் வாழிடங்களும் சிதைவுக்குள்ளாவது பற்றி எடுத்துச் சொல்லி அவர்களின் ஆதரவை திரட்ட முற்படுவோம்.

மாசற்ற சுற்றுலா: காடுகளில் பயணம் செய்யும்பொழுது பொறுப்புடன் பயணிப்போம். காடுகளை பாழ்படுத்தாமல் இருக்க உறுதி எடுப்போம். காட்டுத்தீயை தவிர்ப்போம். காட்டுப் பாதையில் பயணிக்கும் போது வாகனங்களை மெதுவாக ஓட்டிச் செல்ல பழகுவோம். காடுகளில் நம் காலடித்தடங்களை தவிர வேறெதையும் விட்டுச் செல்வதில்லை என உறுதியெடுப்போம்.

நேரடியாக அறிந்து கொள்வோம்: உள்ளூர் மக்களின் புலிகள் பாதுகாப்பு தொடர்பான பாரம்பரிய அறிவை நேரில் சென்று அவர்களுடன் கலந்துரையாடி அறிய முயல்வோம். காட்டுயிர் பாதுகாப்பில் ஈடுபட்டுள்ள மற்ற அமைப்புகளுடன் இணைந்து செயல்படுவோம்.

மக்கள் பிரதிநிதிகளுக்கு நமது கரிசனத்தை தெரிவிப்போம்: புலிகளை பாதுகாப்பது வருங்காலத்தலைமுறையை பாதுகாப்பதற்கு ஒப்பாகும் என்பதை வலியுறுத்தி முதல்வர், பிரதமர், சட்டமன்ற, நாடாளுமன்ற உறுப்பினர்கள், வன அமைச்சகத்திற்கும் தொடர்ந்து கடிதம் எழுதுவோம்.

காட்டுயிர் விற்பனையை தடைசெய்ய உதவி புரிவோம்: புலிகள் வேட்டையாடப்படுவதையும் அவற்றின் உடல் உறுப்புகளின் விற்பனையையும் கண்காணிக்க டிராபிக் இந்தியா (TRAFFIC India) என்ற அமைப்பு இயங்கி வருகின்றது. இவ்வாறான சட்ட விரோத நடவடிக்கைகள் பற்றி தகவல் தெரிவிக்க கீழ்க்கண்ட முகவரியை அனுகலாம். (தொலை பேசி: 0422 4202802, மின்னஞ்சல்: trafficind@wwfindia.net, இணையம்: www.traffic.org)

இயற்கை வளங்களின் மீதான தாக்கத்தை குறைத்தல்: நாம் பயன் படுத்தும் ஒவ்வொரு பொருளும் இயற்கையிலிருந்தோ அல்லது அதை அழித்தோ உருவாக்கப்பட்டது என்பதை நினைவில் கொள்வோம். மறுசுழற்சி, பொருட்களை மீண்டும் பயன்படுத்துதல், விறகு, மரத்தாலான பொருட்கள், காகிதம் இவற்றை சிக்கனமாக பயன்படுத்துவோம்.

நன்கொடை: புலிகள் பாதுகாப்பில் செயல்பட்டு வரும் இயற்கைக்கான உலக நிதியத்தின் செயல்பாடுகளுக்கும், பிற அமைப்புகளின் செயல்பாடுகளுக்கும் நன்கொடைகள் அளித்து ஊக்குவித்தல்.

மேலும் தகவலுக்கு.: www.wwfindia.org, www.projecttiger.nic.in